
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 07
நவம்பர் 2022

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்






# விருதுகள் பெற்றமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து

தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரிய கருப்பன் அவர்கள் சந்தித்து, புது தில்லியில் 02.10.2022 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அவர்களால் சுகாதாரத்திற்கான மதிப்பீட்டில் தேசிய அளவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட விருதினையும், 'சுஜாலம் 1.0' எனும் 100 நாள் நீர் மேலாண்மை இயக்கத்தில் தமிழ்நாடு ஐந்தாம் இடம் பெற்றமைக்கான விருதினையும் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின் போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை அரசு இணைச் செயலாளர் திரு. சந்திரசேகர் சகாமூரி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் தாரேஷ் அகமது, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

# மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்பு, ஏழை மகளிர் தொழில் துவங்க மற்றும் விரிவுபடுத்துவதற்கான நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதன் மூலம் அவர்களின் வருமானம் பெருகி வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது. ஏழைக் குடும்பங்களின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, 2022–2023 ஆம் நிதி ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பாக ரூ. 25,000 கோடிவழங்கப்படும் என மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 31.10.2022 வரை 1,87,954 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ. 9816.13 கோடி வங்கிக்கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.



**திருமதி. ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் அமைக்கப்பட்டுள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ள பெண்கள், அனைத்துத் துறைகளிலும் தங்களின் ஆளுமையையும், திறமையையும் வெளிப்படுத்தி சிறந்த தொழில் முனைவோர்களாக திகழ்ந்து வருகின்றனர். இது சுய உதவிக் குழு இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதுமட்டுமல்லாது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் துணை அமைப்புகளான தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலமாகவும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் நகர்ப்புரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் செயல்படும் சுய உதவிக் குழுவினர் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். மேலும் தீனதயாள் உபாத்யாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படுவதுடன், சுய தொழில் மேற்கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் குறித்து எவ்வளவோ எடுத்துக் கூறலாம்.

தற்போது பருவமழை துவங்கியுள்ளது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்ப்பு, மரம் வளர்ப்பு, பெண் கல்வி போன்ற பல்வேறு குறிக்கோள்களைக் கொண்டு செயல்பட்டு, எதிர் வரும் இடையூறுகளையும், தடைகளையும் தகர்த்து முன்னேற்றப் பாதையில்வெற்றி நடைபோட்டு வரும் சுய உதவிக் குழு மகளிர் மேலும் மேலும் பல வெற்றிகளைப் பெற்று, சாதனைகளைப் படைத்து முன்னேற்றம் அடைந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உங்களின் செயல்பாடுகளுக்கு என்றும் துணை நிற்கும் என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

*மீண்டும் சந்திப்போம்...*

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



**திருமதி. பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

**சுய உதவிக் குழு சகோதரிகளே,**

உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம். சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழ் மூலம் மாதந்தோறும் உங்களை சந்தித்து கலந்துரையாடுவது எனக்கு மகிழ்ச்சியை தருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புரங்களில் சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, பயிற்சிக்குப் பின்னர் சுய தொழில் தொடங்கவும், வேலைவாய்ப்பு பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் பயனாக நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர்.

நகர்ப்புரங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மாடித் தோட்டம் அமைத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பயிற்சி ராக்பெல்லர் பவுண்டேஷன் எனும் அமைப்புடன் இணைந்து, முதற்கட்டமாக சென்னையில் வழங்கப்பட்டுள்ளது. குழு உறுப்பினர்கள் வசிக்கும் பகுதிக்கு அருலுள்ள குடியிருப்பு நலச் சங்கம் அமைப்புகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, மாடித் தோட்டங்களை அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொண்டு வருவதால், குழு உறுப்பினர்களுக்கு கூடுதல் வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மறு குடியமர்த்தப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் (Tenement) வசிக்கும் மகளிரை ஒருங்கிணைத்து குழு அமைத்தல், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்குதல், தகுதியான குழுக்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தருதல் மற்றும் இளைஞர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் துரிதமாக நடைபெற சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. எனவே, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் இப்பணிகளுக்கு அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் முழு ஒத்துழைப்பினை வழங்கி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2018ஆம் ஆண்டிற்கு பிறகு கூட்டுறவு வங்கிகளின் (PACCS / Urban Co-op Bank) மூலம் பெறப்படும் வங்கிக் கடன்களுக்கு, ஒருங்கிணைந்த வங்கிப் பணப் பரிவர்த்தனை (CBS) வசதியில்லாத காரணத்தினால் இணையவழி வட்டி மானியம் வழங்கப்படாமல் இருந்தது. தற்பொழுது மேற்கண்ட வங்கிகளில் கடன் பெற்ற குழுக்கள் / தனி நபர்களுக்கு (சுய வேலைவாய்ப்புத் திட்டம்) நேரடி வட்டி மானியம் வழங்குவதற்கான அனுமதி பெறப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் – சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் வங்கிக் கடன்களுக்கு நேரடி வங்கி மானியம் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

நகர்ப்புரங்களில் வாழும் அனைத்து ஏழை எளிய குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பு, திறன் வளர்ப்பு, நிதி இணைப்பு, தொழில் துவங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருவதன் மூலம் நகர்ப்புர ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது. மேலும், உங்களின் வளர்ச்சிக்கு நமது இயக்கம் என்று துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

## குறளும் – பொருளும்

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

உருவத்தை விட ஊக்கமே வலிவானது என்பதற்கு எடுத்துக்காட்டு, கொழுத்த உடம்பும், கூர்மையான கொம்புகளும் கொண்ட யானை, தன்னைத் தாக்க வரும் புலியைக் கண்டு அஞ்சி நடுங்குவதுதான்.

TNCDW
Tncdw State
www.Tncdw.org
Tncdw State

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடுநிலைப்பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தார் | 07 |
| குட்டிக் காவலர் மாணவர்களுக்கான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டம் துவக்கம் | 08 |
| தேசிய அளவிலான ஊரக சுகாதார கருத்தரங்கம் | 12 |
| உள்ளாட்சி தினம் – கிராம சபைக் கூட்டம் | 14 |
| இளைஞர் திறன் திருவிழா | 18 |
| சாதனைப் பெண்கள் | 20 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ. 20/– மலர் 24 இதழ் 07
நவம்பர் 2022

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம். அருணா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
திருமதி. **க. முத்து மீனாள்,** கூடுதல் இயக்குநர்,
**பா. செல்வராஜன்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர்,
**நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **PRE CREATIVE**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்',**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## எந்த குழந்தையும் நல்ல குழந்தையே....

அன்புள்ள வாசகர்களுக்கு,

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என குழந்தைகளைப் பற்றி உயர்வாகக் கூறி வருகின்றோம். இதன் பொருள் என்னவென்றால் குழந்தைகள் கள்ளம் கபடம் ஆற்றவர்கள், உண்மையை பேசுபவர்கள், வஞ்சமோ சூழ்ச்சியோ செய்யத் தெரியாதவர்கள். இதுபோன்ற குணங்களை கொண்ட குழந்தைகள் வளர்ந்து சிறுவர்களாக இருக்கும் பொழுதே, அந்த பிஞ்சு மனதில் சமூகப் பண்புகளை வளர்ப்பதற்கும், சுயநல பண்புகளை தவிர்ப்பதற்கும் கற்றுக் கொடுக்க வேண்டியது சமுதாயத்தின் பெரும் கடமைகளில் ஒன்றாகும். நற்பண்புகளான தன்னொழுக்கம், சமூகப் பொறுப்பு, தேசப்பற்று ஆகியவைகளை அவர்களிடையே வளர்ப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத்தான் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் குழந்தைகள் தின விழாவினை கொண்டாடி வருகின்றோம்.

குழந்தைகள் தின விழா கொண்டாட்டத்தை சடங்காக பார்க்காமலும், கலை நிகழ்ச்சிகளோடு மட்டுமே நிறுத்தி கொள்ளாமல் அவர்களுக்குள் இருக்கும் தொழில் நுட்ப திறன், கலை திறன், நிர்வாக திறன் போன்ற பல்வேறு திறமைகளை வளர்ப்பதற்கும் திட்டமிட வேண்டியது அவசியமாகும். அப்படிப்பட்ட பண்புகள்தான் எதிர்வரும் காலங்களில் அவர்கள் நல்ல தலைவர்களாகவும், பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகவும் வருவதற்கு வழிவகுக்கும். இந்த சிறு வயதில் அவர்களுக்கு கற்றுக் கொடுப்பவைகள் தான் அவர்கள் மனதில் பசு மரத்தாணி போன்று பதிந்திருக்கும்.

இப்படிப்பட்ட பண்புகளை வளர்ப்பதற்கு குடும்பங்களில் பெற்றோர்களின் முயற்சியும், கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்களின் பயிற்சியும், சமூகத்தில் பெரியவர்களின் அறிவுரைகளும் மிகவும் அவசியமான ஒன்று. பெற்றோர்கள் பாசத்தை மட்டுமே கொட்டி பிள்ளைகளை வளர்ப்பதோடு நின்று விடாமல், அவர்களுக்கு நல்வழியை காட்டும் பயிற்சிகளையும் அளிப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே". அன்னை என்று குறிப்பிடுவது தாய் மட்டும்தான் ஏன்று தட்டி கழித்து விடக்கூடாது. குழந்தையை வளர்த்தெடுக்கும் பொறுப்பு சமுதாயத்திற்கும் உண்டு.

குழந்தைகள் உடல் வளர்ச்சியோடு மூளை வளர்ச்சியும் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கோடு, சிறார்களுக்கு சத்தான மற்றும் தரமான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு அனைத்து குழந்தைகளின் சார்பாக இதயபூர்வமான பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில், குழந்தைகள் தினத்தை கொண்டாடி பரிசுகளை வழங்கி சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

# இடைசெவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.10.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், இடைசெவல் ஊராட்சியில், கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் திரு. ராஜநாராயணன் அவர்களின் நினைவாக 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய மாறாமல் புதுப்பிக்கப்பட்ட இடைசெவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் மரு. தாரேஷ் அஹமது, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




பள்ளியின் முந்தைய தோற்றம்



பள்ளியின் தற்போதைய தோற்றம்



## சென்னை பெருநகரப் பகுதி எல்லை விரிவாக்கம் குறித்து ஆய்வுக் கூட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 11.10.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகரப் பகுதி எல்லை விரிவாக்கம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹிதேஸ்குமார் எஸ். மக்வானா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குட்டிக் காவலர் மாணவர்களுக்கான
# சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டம் துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 12.10.2022 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தமிழ்நாடு அரசு மற்றும் கோயம்புத்தூர், உயிர் அறக்கட்டளை இணைந்து "குட்டிக் காவலர்" மாணவர்களுக்கான சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டத்தை தொடங்கி வைப்பதன் அடையாளமாக சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, இ.கா.ப., உயிர் அறக்கட்டளை தலைவர் திரு.சஞ்சய் ஜெயவர்தனவேலு, நிர்வாக அறங்காவலர் டாக்டர் எஸ்.ராஜசேகரன், அறங்காவலர் திரு. ஜி.சவுந்திரராஜன், புரவலர் திரு.எஸ்.வி.பாலசுப்பிரமணியம், உறுப்பினர் திரு.எஸ்.நடராஜன் ஆகியோரும், கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் திரு. வி.பாலகிருஷ்ணன், இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் திரு. வி.பத்ரி நாராயணன், இ.கா.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு.மு.பிரதாப், இ.கா.ப., உயிர் அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.









## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன்,
## HCL நிறுவனத்தின் தலைவர் சந்திப்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 17.10.2022 அன்று முகாம் அலுவலகத்தில், HCL நிறுவனத்தின் தலைவர் திருமதி. ரோஷினி நாடார் மல்ஹோத்ரா, சிவ நாடார் அறக்கட்டளையின் தலைவர் திரு. ஷிகர் மல்ஹோத்ரா ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் HCL நிறுவனத்தின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., HCL சமுதாய திட்டத்தின் ஆலோசகர் திரு. கே.சண்முகம், இ.ஆ.ப., (ஓய்வு), HCL கார்ப்பரேஷன் தலைவர் திரு. சுந்தர் மகாலிங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




# தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission) திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்

13.10.2022 அன்று சென்னையில், மாண்புமிகு ஒன்றிய அரசின் நீர்வளத்துறை (ஜல்சக்தி) அமைச்சர் திரு.கஜேந்திர சிங் செகாவத் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என்.நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் முன்னிலையில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிர் நீர் இயக்க (Jal Jeevan Mission) திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அரசின் குடிநீர் வழங்கல் மற்றும் தூய்மைத் திட்டத் துறை செயலாளர் திருமதி. வினி மகாஜன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., ஒன்றிய அரசின் இணைச் செயலாளர் திரு. சமீர் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு உயிர் நீர் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு.வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஷ் அகமது, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வடழக்கு பருவ மழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு இந்த சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் 03.11.2022 அன்று திரு.வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., திரு. ரஞ்சித் சிங், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# உள்ளாட்சி தினம் – கிராம சபைக் கூட்டம்

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தட்டட்டி ஊராட்சியில் உள்ள கொராட்டி கிராமத்தில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு 01.11.2022 அன்று கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன், 162 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடனாக ரூ.43.10 இலட்சம், சமுதாய முதலீட்டு நிதியாக 6 நபர்களுக்கு ரூ. 3 இலட்சம், நலிவுற்றோர் வறுமை குறைப்பு நிதியாக 6 நபர்களுக்கு ரூ. 60 ஆயிரம் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி விழா சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







## உலக உணவு நாள் – 2022 விழாவில் மகளிர் சுய உதவிக் குழுவினரின் விற்பனை அரங்கு



15.10.2022 அன்று சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர் பாபு ஆகியோர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற “உலக உணவு நாள் 2022” விழாவில் உணவுப் பொருள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அரங்குகளைப் பார்வையிட்டார்கள். உடன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உள்ளனர்.

## இளைஞர்களுக்கு திறன் பயிற்சி சான்றிதழ்கள் வழங்குதல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் இளைஞர் திறன் திருவிழா 20.10.2022 அன்று மேல் மலையனூர் ஒன்றியத்திலும், 21.10.2022 அன்று வல்லம் ஒன்றியத்திலும் நடைபெற்றது. மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இளைஞர்களுக்கு திறன் பயிற்சி சேர்க்கைக்கான சான்றிதழ்கள், சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, நலிவுற்றோர் குறைப்பு நிதி மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.மோகன், இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பூ.காஞ்சனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் மகளிர் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.










# தேசிய அளவிலான
# ஊரக சுகாதார கருத்தரங்கம்

மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தி, சுகாதார பழக்கவழக்கங்களை ஊக்கப்படுத்திடும் நோக்கத்துடன் நம் நாட்டில் தூய்மை பாரத இயக்கம் (ஊரக) பகுதி–1 தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, திடக்கழிவு மேலாண்மை, தொடர் கழிப்பறை பயன்பாடு மற்றும் கழிவு நீர் மேலாண்மை மூலம் பார்வைக்கு தூய்மை யாக காட்சியளிக்கும் கிராமங்களை உருவாக்குவதே 2020–21ஆம் ஆண்டில்தொடங்கப்பட்ட தூய்மை பாரத இயக்கம் (ஊரக) பகுதி 2–இன் முக்கிய நோக்கம் ஆகும். இதன் மூலம் சுத்தமான மற்றும் பசுமையான கிராமங்களை அடைவதே இலக்காகும்.

ஊரகப் பகுதிகளின் தூய்மை நிலை மற்றும் அங்கு அமைந்துள்ள சுகாதார வசதிகளை ஆய்வு செய்யும் பொருட்டு, ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத்திற்கான ஆய்வினை (தூய்மை கணக்கெடுப்பு (ஊரக)) மேற்கொள்கிறது. இந்த ஆய்வில், சுகாதாரத்திற்கான பல்வேறு முக்கிய குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களின் சுகாதார நிலை ஆய்வு செய்யப்பட்டு தர வரிசைப்படுத்தப்படுகிறது.

2022ஆம் ஆண்டின் ஊரக தூய்மை கணக்கெடுப்பின் அடிப்படையில், தமிழகம் மூன்றாமிடம் பெற்றது. இதற்கான











விருதினை 02.10.2022 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களிடம் இருந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலர் திருமதி.பெ.அமுதா இ.ஆ.ப ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

வீட்டுத்தோட்டம், தனி நபர் உறிஞ்சுக்குழிகள் மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழிகள் போன்ற கழிவு நீர் மேலாண்மை பணிகளை ஊக்குவிக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட 'சுஜலாம் 1.0' எனும் 100 நாள் நீர் மேலாண்மை இயக்கத்தில் தமிழகம் தேசிய அளவில் 'ஐந்தாம்' இடம் பெற்றதற்கான விருது அந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஜல் சக்தி அமைச்சகத்தின் அமைச்சர் முன்னிலையில் 13.10.2022 அன்று சென்னையில் நடைபெற்ற ஜல்ஜீவன் இயக்கம் மற்றும் தூய்மை பாரத இயக்கத்திற்கான ஆய்வுக்கூட்டத்தில், நம் மாநிலத்தில் உள்ள கிராம ஊராட்சியில் தயாரிக்கப்படும் கிராம ஊராட்சிக்கான முழு சுகாதார திட்டத்தை பாராட்டியதுடன் அதனை சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பிற மாநிலத்தின் அரசு உயர் அலுவலர்களுடன் பகிருமாறு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து 13.10.2022 அன்று சென்னையில், ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையின் செயலாளர் திருமதி. வினி மஹாஜன், இ.ஆ.ப அவர்கள் தலைமையில், ஊரக பகுதிகளில் உள்ள சுகாதாரத்தின் தரம் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பில் அடைந்த முன்னேற்றம் குறித்த தகவல்களை பகிரும் நோக்கில் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் 28 மாநிலங்களிலிருந்து அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில், 2022 இல் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டதுடன், 2023 இல் நடைபெறவுள்ள ஆய்வின் கூறுகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஒன்றிய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையின் கூடுதல் செயலாளர் திரு. விகாஸ் ஷீல், இ.ஆ.ப, இணை செயலாளர் திரு. சமீர் குமார், இ.பொ.ப., ஒன்றிய ஊராட்சி துறை அமைச்சகத்தின் இணை செயலாளர் திரு. அலோக் பிரேம் நாகர், இ.வ.ப., தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, 14.10.2022 அன்று செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தூய்மை பாரத இயக்கம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளை அனைத்து மாநில பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# உள்ளாட்சிகள் தினம் – கிராம சபைக் கூட்டம்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியம்,வில்வமரத்துப்பட்டிஊராட்சியில்01.11.2022 அன்று உள்ளாட்சி தினம் கிராம சபைக் கூட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.செந்தில்ராஜ், இ.ஆ.ப., விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வி. மார்க்கண்டேயன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.






தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியம், வில்வமரத்துப்பட்டி ஊராட்சியில் 01.11.2022 அன்று நடைபெற்ற உள்ளாட்சி தினம் கிராம சபைக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. செந்தில்ராஜ், இ.ஆ.ப., விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வி. மார்க்கண்டேயன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில், தூய்மைப் பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் குடைகளை வழங்கினார்.



## தன்னார்வலர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியம் கூட்ட அரங்கில், எச்.சி.எல். சமுதாய திட்ட செயலாக்க தன்னார்வலர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் 01.11.2022 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. செந்தில்ராஜ், இ.ஆ.ப., விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வி.மார்க்கண்டேயன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.








## மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் பயனாளிகளுடன் கலந்துரையாடல்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியம், கே. தங்கம்மாள்புரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் பயனாளிகளிடம், 01.11.2022 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. செந்தில்ராஜ், இ.ஆ.ப., விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வி. மார்க்கண்டேயன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் கலந்துரையாடினார்.

## சிமெண்ட் கலவையுடன் கூடிய கற்கள் பதிக்கும் பணியினை துவக்கி வைத்து பார்வையிடல்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியம், கே. தங்கம்மாள்புரம் ஊராட்சியில் குடிநீர் கண்மாயின் கொள்ளளவினை அதிகரித்தல் மற்றும் கரையில் சிமெண்ட் கலவையுடன் கூடிய கற்கள் பதிக்கும் பணியினை, 01.11.2022 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. செந்தில்ராஜ், இ.ஆ.ப., விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.வி. மார்க்கண்டேயன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, பணிகளைப் பார்வையிட்டார்.



# மாநில தலைமைச் செயலாளர்களின் 2வது தேசிய மாநாடு முன்னேற்பாடு குறித்த கலந்தாய்வுக் கூட்டம்




தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், மாநில தலைமைச் செயலாளர்களின் 2வது தேசிய மாநாடு முன்னேற்பாடு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் 17.11.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. எம்.அருணா, இ.ஆ.ப., தேசிய சுகாதார இயக்கத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை திட்ட இயக்குநர் திருமதி. வி.அமுதவள்ளி, இ.ஆ.ப., அரசு இணைச் செயலாளர் திருமதி. ஆர்.சீதாலட்சுமி, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. டி.ரத்னா, இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேபாட்டுக்ம் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 19.10.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுநிறுவனத்தின் செயல்பாடுகள், அடைந்துள்ள இலக்குகள், மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் போன்றவை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, திட்ட செயல்பாடுகளை விரைந்து முடித்திட உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேபாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மேலாளர்களுக்கு **தொழிலாளர் சட்ட விதிமுறைகள் குறித்த பயிற்சிப் பட்டறை**






தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மேலாளர்களுக்கு தொழிலாளர் சட்ட விதிமுறைகள் குறித்து ஒரு நாள் பயிற்சிப் பட்டறை 17.10.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையின் நோக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கங்கள், நகர்ப்புர வாழ்வாதார மையங்களின் செயல்பாடுகள் குறித்தும், ESIC நிறுவனத்தின் துணை இயக்குநர் திரு. அருள்ராஜ் அவர்கள் தொழிலாளர் சட்டவிதிகள், ESIC நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்டங்கள், காப்பீடு விதிமுறைகள் போன்றவை குறித்தும் விளக்கமளித்தனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர்கள் திரு. நாராயணன், திருமதி. விஜயகுமாரி, மாநில திட்ட மேலாளர்கள் திரு. பி. மணிராஜ், திரு. கே. மூர்த்தி, திரு.எஸ். நித்தியானந்தம், திரு. ஆர்.சுபாஷ்பாபுநாத் மங்களம், ESIC நிறுவனத்தின் அலுவலர்கள், நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கல்லூரிச் சந்தை

நாகப்பட்டினம் மாவட்டம் ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், நாகப்பட்டினம் ADM மகளிர் கல்லூரியில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் கல்லூரிச் சந்தையை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் 18.01.2022 அன்று துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார். இந்தக் கல்லூரிச் சந்தையில் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பொம்மைகள், சணல் பைகள், செயற்கை ஆபரணங்கள், இயற்கை மூலிகைப் பொருட்கள் போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்ச்சியில், கல்லூரி முதல்வர் திருமதி. அன்புசெல்வி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர், DSMS மேலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# இளைஞர் திறன் திருவிழா

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் மூலம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் இளைஞர் திறன் திருவிழா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.




புதுப்பாளையம் இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 14.10.2022 அன்று நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவில் 956க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 349 இளைஞர்கள் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் திறன் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிக்கு சேருவதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.சு.தி.சரவணன், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பா.அஸையித் சுலைமான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேத்துப்பட்டு தோமினிக் சாவியோ மேல்நிலைப் பள்ளியில் 26.10.2022 அன்று நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவில் 956க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 332 இளைஞர்கள் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் திறன் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிக்கு சேருவதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் திரு.வீர் பிரதாப் சிங், இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பா.அஸையித் சுலைமான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



போளூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 19.10.2022 அன்று நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவில் 1570 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 446 இளைஞர்கள் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் திறன் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிக்கு சேருவதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பா.அஸையித் சுலைமான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாள் (டிசம்பர் 3)

உலக மக்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதுடன், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தால் ஐக்கிய நாடுகள் சபை உலகம் முழுவதும் பன்னாட்டு ஊனமுற்றோர் நாள் என டிசம்பர் 3ஆம் நாளை அனுசரிக்கின்றது.

1981–ஆண்டை உலக மாற்றுத் திறனாளிகள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் அவை அறிவித்தது. 1992–ஆம் ஆண்டு டிசம்பர் 3–ம் தேதியை பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாளாக அறிவித்தது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள், உலக நாடுகளால் பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாள் என கொண்டாடப்படுகின்றது.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு மட்டத்தில் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. பொதுவாக தன்னார்வலர்களினாலேயே இந்நாளில் பல முன்னெடுப்புகள் இடம் பெறுகின்றன. பல நாடுகளில் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஊனமுற்றோர்களின் நிலையை உயர்த்துவதற்கான செயல் திட்டங்களைத் தீட்டி, அவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணை புரிகின்றன. அத்துடன், சமுதாயத்தில் ஊனமுற்றோர்களின் நிலை உயர சிறப்புக் கருத்தரங்கங்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், பிரச்சாரங்கள், ஊடகங்கள் வழியாக விழிப்புணர்வு விளம்பரங்கள் ஆகியவற்றின் வாயிலாக சமூகத்தில் சம உரிமைகளுடன் ஒவ்வொரு துறையிலும் ஊனமுற்றோர்கள் சிறந்து விளங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## நோக்கம்


மாற்றுத் திறனாளிகளுக்கு, அரசாங்கமும், சேவை வழங்கும் நிறுவனங்களும், பெற்றோரும், ஏனைய மனிதர்களும் உதவுவது, இவர்களின் வாழ்க்கையில் எல்லோரையும் போல சகல உரிமைகளையும் பெற வைப்பது ஒரு சமுதாய கடமையாகும் என மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

## ஊனமுற்றோர் வகைப்பாடு (இந்திய அளவில்)

1. பார்வை குறைபாடுடையோர்
2. கை, கால் குறைபாடுடையோர்
3. செவித்திறன் குறைந்தோர் மற்றும் பேச இயலாதவர்
4. மனவளர்ச்சி குன்றியவர்கள்
5. தொழுநோய் பாதித்தவர்கள் மற்றும் குணமடைந்தவர்கள் – என்று ஐந்து வகைகளாக பிரிக்கப்பட்டு உள்ளனர்.

## ஊனமுற்றோர் மறுவாழ்வு முயற்சிகள்

- 1957 ஆம் ஆண்டு ஊனமுற்றோருக்கான முதல் வேலைவாய்ப்பு மையம் பம்பாயில் ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து 22 நிலையங்கள் மத்திய அரசால் பெரும் நகரங்களில் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் 55 உப அலுவலகங்கள் பல்வேறு கிராமப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.
- 1968 ஆம் ஆண்டு மத்திய அரசால் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 17 இல்லங்கள் இந்தியாவின் பெரும் நகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.
- 1981 ஆம் ஆண்டு சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டாக அனுசரிக்கப்பட்டது.
- 1969 ஆம் ஆண்டு முதல் வேலை பார்க்கும் ஊனமுற்றோர்களுக்கு வகைக்கு இரண்டு பேராக 10 நபர்களுக்கு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 5 நபர்களுக்கு தேசிய விருதுகள் சர்வதேச ஊனமுற்றோர் தினம் அன்று, குடியரசு தலைவரால் வழங்கப்படுகிறது.
- 1995 – ஆண்டின் ஊனமுற்றோர் (சம வைப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டமும், 1992 ஆம் ஆண்டின் மறுவாழ்வு குழுமச் சட்டமும், 1999 ஆம் ஆண்டின் ஊனமுற்றோர் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டமும் அவர்கள் நலனுக்காக இந்திய அரசால் இயற்றப்பட்டவை ஆகும்.
- இந்தியாவில் மத்திய அரசால் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இவை போக அனைத்து மாநில அரசுகளும் ஊனமுற்றோர் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.



# சாதனைப் பெண்கள்

**தெ. பாஸ்கர பாண்டியன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

“கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை...!”

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளை ஏற்று இன்றைய பெண்கள் பல்கலைக் கழகங்களாக உருவெடுத்துள்ளனளர்.

நீரினையும் நிலத்தினையும் பெண் கடவுளாக உருவகப்படுத்தி, பெண்களை உயர்த்தி வணங்கிய சமூகம்...! ஆணும் பெண்ணும் சமம் என்பதை சங்க காலம் முதற்கொண்டே அறிவுறுத்திய சமூகம்...! அரசனுக்கே அறிவுரை கூறிய ஔவையார் போன்று எண்ணற்ற பெண்பாற் புலவர்களை தன்னகத்தே கொண்டு உலகில் ஓங்கி உயர்ந்த சமூகம்...! நம் தமிழ் சமூகம்.

நம் தேசத்தை பொருளாதார தன்னிறைவு கொண்ட தேசமாகவும், கல்வி, அறிவியல் என அனைத்துத் துறைகளிலும் ஆற்றல்மிகு தேசமாகவும் மாற்றி வருவதில் இத்தேசத்துப் பெண்களின் பங்கு அபரிமிதமானது.

அரசியல், கல்வி, விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கான சம உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளதால் நம் தேசம் இன்று அனைவரையும் ஒருங்கிணைத்த சமூக பாகுபாடுகள் அற்ற வளர்ச்சியினை பெற்று, அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவுப் பெற்ற நாடாக வளர்ந்து வருகிறது.

தன் குழந்தைகள் மற்றும் தன் குடும்பத்தின் வளர்ச்சி என குறுவட்டத்தில் பெண்களின் கனவுகளை குறுக்கிய காலம் கடந்து, இன்று நாட்டின் ஒட்டுமொத்த மற்றும் நிலையான வளர்ச்சிக்கு பெண்கள் முக்கிய பங்காற்றுபவர்களாக உள்ளனர் என்று பெருமைக் கொள்ளும் நிலையை எட்டியுள்ளோம் என்றால் அது மிகையாகாது.

விண்வெளி ஆராய்ச்சி முதல் கடல்வாழ் உயிர்கள் குறித்த ஆராய்ச்சி வரை உலகளவில் சாதனையாளர்களாக பெண்கள் சாதித்துக் காட்டி வருகின்றனர்.

கிராமப்புற பெண்கள் கல்வியில் பின்தங்கி இருந்த நிலை மாறி, இன்று தேர்ச்சி விழுக்காட்டில் ஆண்களைவிட அதிகமாக தேர்ச்சி பெற்று வருன்றனர். பொதுவாகவே, பெண்கள் ஆழ்ந்த நுண்ணறிவு கொண்டவர்களாகவும், சிக்கலைத் தீர்க்கும் ஆக்கப்பூர்வமான திறன்களை கொண்டவர்களாகவும், சாதனைகள் பல புரிபவர்களாகவும் விளங்குகின்றனர்.

இராணிப்பேட்டை மாவட்டம் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் (மகளிர் திட்டம்) பணிபுரியும் பெண்கள் யாவரும் ஒன்றிணைந்து, கிராமம் மற்றும் நகர்ப்புரத்தில் வசிக்கும் பெண்களை எல்லாம் ஒருங்கிணைத்து தொடர்ந்து சுய உதவிக் குழுக்களை சிறப்பாக வழிநடத்தி, மகளிர் வாழ்வாதாரத்தை மேம்பாடு அடையச் செய்வதில் யாம் மிகுந்த மகிழ்ச்சிக் கொள்கிறோம்.

கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற விதவைகள், திருநங்கைகள், கொத்தடிமையில் இருந்து மீட்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியோர்கள் என விளிம்பு நிலையில் உள்ள அனைத்து பிரிவினரையும் சிறப்பு சுய உதவிக் குழுக்களில் இணைத்து, நீடித்த நிலைத்த வளர்ச்சியை சமூகம் / பொருளாதாரத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் மூலமாக அனைத்துத் தரப்பு மகளிரும் தன்னிறைவு பெற்ற வாழ்க்கையினை வாழவும், பொருளாதார ரீதியாக மேம்பட பெரும் அளவிலான கடன் வசதிகளை ஏற்படுத்தியும், தொழில் வாய்ப்புகளை பெற்று, வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். பெண்கள் சுயமாக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு ஏதுவாக, சுய உதவிக் குழு மகளிருக்கு ஆளுமைத்திறன், நிதி மேலாண்மை, சுய தொழில் முனைவோர் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு...?” என்ற நிலை மாறி இன்று பெரும்பாலான மகளிர் அரசியல் என்ற பெருங்கடலில் நீந்தி, முத்தெடுத்து வெற்றி வாகை சூடியுள்ளனர் என்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்வோம்...! பெண்மையைப் போற்றுவோம்...!

# ஆங்கில அறிவு மற்றும் மென்திறன் பயிற்சிக்கான
# பாடத் திட்டங்களை தரப்படுத்துதல் திட்டம்

**பா. செல்வராஜன்**
கூடுதல் இயக்குநர்
முதன்மை இயக்கு அலுவலர்,
DDU-GKY

தீன்தயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டமானது (DDU-GKY) 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட கிராமப்புற ஏழை, எளிய இளைஞர்களுக்கு திறன் பயிற்சியளித்து, அவர்களுக்கு நிரந்தரமான மாதாந்திர வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதை குறிக்கோளாகக் கொண்டு 2014ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தீன்தயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு 20க்கும் மேற்பட்ட முக்கிய துறைகளின் கீழ் 80க்கும் மேற்பட்ட தொழில் பிரிவுகளில் 130 பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் மூலம் குறுகிய கால பயிற்சிகள் வழங்கி, பயிற்சிக்கு பின் உரிய வேலை வாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது.

மென்திறன் பயிற்சிகள் மூலமாக, இளைஞர்கள் தங்களது அடிப்படை ஆங்கிலம் அறிவு, ஆங்கிலத்தில் உரையாடும் அறிவு, மின்னஞ்சல்கள் பயன்பாடு, வேலை வேண்டி விண்ணப்பிப்பதற்கு தேவையான சுய விவர படிவங்கள் தயாரிக்கும் முறைகள், வேலை வாய்ப்புக்காக நடத்தப்படும் நேர்காணலை எதிர்கொள்ளும் வழிமுறைகள், ஆளுமைத் திறன், குழுவாக இணைந்து செயல்படுதல் என பன்முகத்திறன் கொண்டவர்களாக மெருகேற்றப்படுவதால் பயிற்சிக்குப் பின் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவது எளிதாகிறது.

இத்திட்டத்தில், மேற்கூறிய மென்திறன் பயிற்சிகளை சீரமைக்கும் நோக்கில் அனைத்து பயிற்சி நிறுவனங்களும் ஒரே சீரான மென்திறன் பயிற்சி முறையை கையாளுவதற்காக DDU-GKY திட்டம் மூலம் எடுக்கப்படும் சிறப்பு முயற்சியே "ஆங்கில அறிவு மற்றும் மென்திறன் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை தரப்படுத்துதல் திட்டம்" ஆகும்.

இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் NRETP எனும் திட்டத்தின் கீழ் ரூபாய் 2.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டு முதற்கட்ட நிதியாக ரூபாய் 92 லட்சம் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தை தொழில்நுட்ப உதவி நிறுவனமாகக் கொண்டு செயல் படுத்திட தமிழக அரசு பரிந்துரை செய்ததன் அடிப்படையில், உலக வங்கியின் கொள்முதல் குழுவும் இதற்கான கொள்கை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவிலேயே முதன்முறையாக தீன்தயாள் உபாத்தியாய ஊரகத்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் (DDU-GKY) ஆங்கில மற்றும் மென்திறன் பயிற்சி பாடத் திட்டத்தினை தரப்படுத்துதலுக்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் – பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனமும் இணைந்து செயல்படும் கூட்டணி செயல்பாட்டு ஒப்பந்தம் 23.10.2022 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்தானது.


இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள அனைத்து DDU-GKY பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த ஆங்கில அறிவு மற்றும், மென் திறன் பயிற்சி வழங்கும் பயிற்சியாளர்களுக்கு இந்நிறுவனம் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் வாயிலாக DDU-GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற உள்ள இளைஞர்களுக்கு தரத்துடன் கூடிய சிறந்த ஆங்கில அறிவு பயிற்சி கிடைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு 40,000 நபர்களுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தின் மூலம் DDU-GKY திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெறும் இளைஞர்கள் பல்வேறு துறைகளின் கீழ் உள்ள பல்வேறு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற ஆங்கில அறிவு கற்றுக் கொடுப்பதற்குத் தேவையான பாடத் திட்ட வடிவமைத்துத் தரப்படும்.

இச்சிறப்பு முயற்சியின் பலனாக, தீன்தயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் இளைஞர்கள் தங்களது ஆங்கில அறிவு மற்றும் மென்திறன் திறமைகளை மேம்படுத்தி உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கு சென்று எளிதில் வேலை வாய்ப்பு பெற்று வாழ்வாதாரத்தை மிகச் சிறந்த முறையில் அமைத்துக் கொள்வர் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து 16.11.2022 அன்று முதல் ஆங்கில அறிவு மற்றும் மென்திறன் பயிற்சிகள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.





# ஆண் - பெண் நிகர்நிலை

(பாலினமும் – பாலியலும்)

– எஸ். சின்னப்பன்

சோழர்கள் ஆட்சி செய்த காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது சங்க காலம் எனப்படுகிறது. அந்த சங்க கால ஆட்சியில் மக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுகள் இன்றியும், ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தனர் என்றும், பெண்கள் மதிப்பு மரியாதையும் மிக்கவர்களாக இருந்தனர் என்றும், ஆண்களும் பெண்களும் எவ்வித பாகுபாடுமின்றி இருந்தனர் என்றும், பெண்கள் கல்வியாளர்களாகவும், புலவர்களாகவும் இருந்தனர் என்றும், அந்த புலவர்களில் ஒருவர்தான் புகழ் மிக்க ஒளவையார் என்றும், இவைகளுக்கான சான்றுகள் உள்ளன என்றும் சரித்திர ஆசிரியர்கள் பதிவு செய்கின்றனர்.

சங்க காலத்திற்கு பின்புதான் பெண்ணடிமை எனும் அவலம் சமூகத்தில் உருவெடுத்து, இரண்டாயிரம் ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் வளர்த்தெடுக்கப்பட்டு விட்டது. உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறை, பெண்கள் கற்பை மூன்று வகைப்படுத்தி, கணவன் இறந்த உடனேயே இறப்பது என்பது முதற் கற்பாகவும், கணவன் இறந்த உடன் அவன் உடல் எரிகின்ற சிதையில் மனைவியும் உடன்கட்டை ஏறுதல் என்பது இடை கற்பாகவும், கணவன் இறந்த பிறகு கவலையோடு உண்ணாமலும், உறங்காமலும் இருப்பது கடை கற்பாகவும் கற்பிக்கப்பட்டு, பெண்கள்மீது திணிக்கப்பட்டது. 18– நூற்றாண்டில் இந்த சமூக அவலத்தை எதிர்த்து மகளிர் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் முற்போக்கு சிந்தனையாளர்கள் ஆகியோர் தீவிரமாகக் குரல் கொடுக்க ஆரம்பித்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளும், பெண் உரிமைக்காக பல சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வருகின்றன.

பெண்ணடிமைக்கான காரணங்களில் ஒன்று பாலினத்திற்கும் பாலியலுக்கும் இடையே உள்ள சில அடிப்படையான உண்மைகளைப் பகுத்துப் பார்க்காமலும், தெளிவாக புரிந்து கொள்ளாமலும் இருப்பதாகும். எனவே, முதலில் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது பாலினம் என்றால் என்ன? பாலியல் என்றால் என்ன? என்பதனையும், இவை இரண்டிற்கு உள்ள வேறுபாடுகளையும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆண்களை ஆண் இனம் என்பதும், பெண்களை பெண் இனம் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே. இந்த ஆண் இனம், பெண் இனம் என்பதுதான் ‘பாலினம்’ என்பதாகும். அதே வேளையில், ஆண்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் கற்பிக்கப்பட்டுள்ள கருத்துகள்தான் ‘பாலியல்’ என்பதாகும்.

பாலினம் மற்றும் பாலியல் ஆகியவற்றின் தன்மைகளை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமானதாகும். ஒரு குழந்தை ஆணாக பிறப்பதும், பெண்ணாக பிறப்பதும் இயற்கையான ஒன்று. ஆனால், ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் கற்பிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டவைகளே தவிர, அவைகள் இயற்கையானது அல்ல. இயற்கையானது அல்ல என அழுத்தமாகக் கூறுவதற்கு காரணம், இயற்கையை மாற்ற முடியாது. ஆனால், செயற்கையாக சமூகத்தால் உருவாக்கப்பட்ட கருத்துக்களை மாற்ற முடியும் என்பதனை எவராலும் மறுக்க முடியாது.

‘பாலினம்’ எனக் கூடிய ஆண்களுக்கு, பெண்களுக்கு இடையே இருப்பது வேறுபாடுகள். அந்த வேறுபாடுகள் இயற்கையானவை. ஆனால் ஆண்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் கற்பிக்கப்பட்டுள்ள கருத்துகளில் இருப்பது வேறுபாடுகள் அல்ல, மாறாக அவை பாகுபாடுகளாகும். அதாவது பெண்களை தாழ்த்தியும், ஆண்களை உயர்வாகவும் பேசும் நிலை இருப்பதால்தான் பெண்ணடிமை சமுதாயத்தில் நீடித்து வருகிறது. ஆண் ஆதிக்கத்திற்கு வலு சேர்ப்பதற்கு இது மிக முக்கிய காரணமாக விளங்குகிறது.

எனவே, ‘பாலியல்’ என்பது பெண்களைப் பற்றி மட்டும் கற்பிக்கப்பட்டது அல்ல. ஆண் பெண் அனைவருக்கும் இருப்பது ஒரே வகையான குணங்கள்தான். ஆண்மை என்றும், பெண்மை என்றும் வெவ்வேறு குணங்கள் இருப்பதாகக் கற்பிக்கப்படுவது உண்மையல்ல. மாறாக, ஆண்களுக்கும், பெண்களுக்கும் இருப்பது ஒரே குணம் அது பொதுமையே. ஆண்களும் பெண்களும் வளர்க்கப்படுகின்ற சூழல், கொடுக்கப்படுகின்ற வாய்ப்புகள், எடுத்துக் கொள்ளும் பயிற்சிகள் மற்றும் உடல் அமைப்புகளுக்கேற்ப செய்யப்படும் வேலைகள் ஆகியவைகளை கொண்டு ஆண்மை குணம், பெண்மை குணம் என்று கற்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான விளக்கத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்...

# சுதந்திரம் என்பது கனவல்ல...

– கவிஞர் சல்மா



அதிகாலை எழுந்து நடை பயிற்சி செய்யும் தருணத்தில் இருந்து இரவு உறங்கச் செல்கிற வரைக்கும் நம் கண்களுக்கு காணக் கிடைக்கிறார்கள் எண்ணற்ற பெண்கள். சகல வேலைகளிலும் தங்களது சமூக பங்களிப்பை உறுதி செய்தவர்களாக அவர்களது பயணம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களது இந்த இயக்கத்திற்கான பின்னணியில் மிக நீண்ட வரலாற்று சுவடுகள் இருக்கின்றன என்றால் அது மிகை இல்லை. பெண்களின் வாழும் உரிமையும், இன்று அவர்களுக்கு கைகூடியுள்ள விடுதலையும், எளிதாக கிடைத்த ஒன்றில்லை. அது ஏராளமான போராட்டங்களால் இட்டு நிரப்பப்பட்டது.

இன்றைக்கு இந்த பெண்கள் பெற்றிருக்கக் கூடிய சுதந்திரத்திற்கு அடிப்படை காரணமாக, தங்களுடைய வாழ்வையே அர்ப்பணித்த எத்தனையோ தலைவர்கள், தனித்த பெண்கள், அமைப்புகள், அனைத்தையும் இந்த சமயத்தில் நாம் நன்றி உடன் நினைவு கூற வேண்டி இருக்கிறது. நிலப்பரபுத்துவம் கெட்டித்துப்போன எந்த ஒரு நாட்டிலும் பெண் விடுதலை என்பது மாபெரும் போராட்டத்தினால் தான் சாத்தியமாயிருக்கிறது. அதே போல பெண்களது இன்றைய சுதந்திரமும் எளிதில் கிடைத்ததல்ல. இந்த சுதந்திரம் இந்த விடுதலைக்கு பக்கபலமாக அரசின் எண்ணற்ற சட்டங்களும், திட்டங்களும், துணை நின்று இருக்கிறது என்றால் அது மிகையல்ல.

ஒரு சமூகம் தன் கூட வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய சக மனுசியான பெண் சமூகத்தை ஒடுக்கும் பொழுது தான் அது பின்தங்கிய ஒரு சமூகமாக மாறுகிறது. பிறப்பிலிருந்து, உடுத்தும் உடையிலிருந்து, உயிர் வாழும் உரிமை வரை சகலத்திலும், பின்தங்கி, ஒடுக்கப்பட்டு கிடந்த அந்த பெண்கள் இன்று சமமாக கல்வி கற்கவும், பொது வெளியில் பங்களிக்கவும் செய்கிறார்கள், தன் கால்களில் நிற்கிறார்கள் என்பதில் நம்மில் யாருக்கும் எந்த ஒரு மாற்று கருத்தும் அபிப்பிராயமும் இருக்க முடியாது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், எத்தகைய சட்டங்களின் வழியே பெண்களது வாழ்க்கையை மாற்ற முடியுமோ அவர்களை இந்த சமூகத்தில் முன்னேற்றுவதற்கு முடியுமோ அவர்களுக்கு உரிய கல்வியையும் வேலை வாய்ப்புகளையும் தர முடியுமோ அத்தகைய சட்டங்களை உருவாக்கி பெண்ணினம் விடுதலை பெறுவதற்கான, சமத்துவம் பெறுவதற்கான மாற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை துவக்கி வைத்தார்.

பெண்கள் தங்களுடைய கல்வியில் முழுமை பெறாமல் போனார்கள் என்றால் அது சமூகத்திற்கு மிகப்பெரிய கேடாக மாறும் என்பதை உணர்ந்து, கல்வி கற்க, வேலை வாய்ப்பிற்கு, பொதுவெளியில் இயங்கக் கூடிய வகையில் பொருளாதார ரீதியாக தங்களை தாங்களே பலப்படுத்துவதற்கான சட்டப் பாதுகாப்போடு இட ஒதுக்கீடுகள் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒரு பெண் சமூகத்தில் வாழும் பொழுது அவளுக்கான உரிமைகளை பெற்றுத் தருவதற்கான வேலைகளை சட்டங்கள் சரியாகவே செயல்படுத்தி இருக்கின்றன.

பெண் முன்னேற்றம் என்பது இயல்பாகவே ஒரு சமூகத்தின் மனநிலையில் இருந்து உருவாக வேண்டும். அப்படியல்லாமல் அனைத்துமே சட்டங்களில் வழியே தான் முன்னிறுத்தப்பட்டு இன்றைக்கு இத்தகைய மாற்றங்கள் உருவாகி இருக்கின்றன.

பெண்கள் அரசியல் பங்களிப்பு என்பதையும் இன்றைக்கு மிகப் பெரிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக சொல்ல முடியும். 50 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பு சட்டங்களின் வழியே தான் பெண்களுடைய கைகளில் வந்து சேர்ந்திருக்கிறது என்றாலும் மிகப் பெரிய அரசியல் மாற்றத்தை உருவாக்கக்கூடிய ஒன்றாக அது இருக்கப் போகிறது.

தங்களுக்கு கிடைத்திருக்க கூடிய வாய்ப்புகள் அனைத்தையுமே இன்றைக்கு பெண்கள் பயன்படுத்தி தங்களை முன்னேற்றிக் கொண்டிருக்கின்றனர். அதை மிகச் சிறப்பாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு காற்றைப் போல ஒரு நெருப்பை போல பிரபஞ்சத்தை போல எல்லையற்றவளாக எங்கெங்கும் அலைந்து திரியக் கூடிய கட்டற்ற சுதந்திரத்தை கொண்டவளாக அவள் வாழ வேண்டும். வீழ்வேனா நான் என தொடரட்டும் அவளது வெற்றிப் பயணம். எங்கும் எதன் பொருட்டும் யாருக்காகவும் நிற்காமல், இந்த நூற்றாண்டில் எண்ணியதெல்லாம் கை கூட வாழ்த்துவோம்.

# காய்கறி உற்பத்தியாளர் குழுவும்... வாழ்வாதார முன்னேற்றமும்...



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மேலாளவந்தசேரி ஊராட்சி அமைந்துள்ளது. இந்த ஊராட்சியில் உள்ள தேவன்குடி குக்கிராமத்தை சேர்ந்த 30 குடும்பத்தினர் தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்து தருமாறு கேட்டு, நீடாமங்கலம் வட்டார இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தினை தொடர்பு கொண்டனர். அவர்களது ஏழ்மை நிலையினையும், ஆர்வத்தினையும் கருத்தில் கொண்டு. ஊராட்சி மன்ற அலுவலகத்தின் உதவியுடன் தேவன்குடி கிராமத்திற்குட்பட்ட முத்துமாரியம்மன் கோவில் இடத்தினை கேட்டு வாங்கி, அங்கு காய்கறி தோட்டம் அமைக்கப்பட்டது.

காய்கறி தோட்டம் அமைப்பதற்குத் தேவையான நிதி உதவிக்கு மேலாளவந்தசேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.50,000/– கடனாக வழங்கப்பட்டு, காய்கறி தோட்டம் அமைப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு உதவி செய்யப்பட்டு, 30 நபர்களைக் கொண்ட காய்கறி உற்பத்தியாளர் குழு அமைக்கப்பட்டது. 30 நபர்களும் இணைந்து இயற்கை உரங்களைப் பயன்படுத்தி கத்திரி, வெண்டை, தக்காளி, முள்ளங்கி, வாழை போன்ற காய்கறிகளை விளைவித்து, விற்பனை செய்து வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, இவர்களுக்கு ரூ.1,50,000/– மான்யத்துடன் குபெட்டா வாகனம் வாங்குவதற்கு கடன் வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் அவர்களது பங்குத் தொகையாக ரூ.39,000/– சேர்த்து ரூ.1,89,000/– மதிப்பில் குபெட்டா இயந்திரம் வாங்கி அதனை உழவுப் பணிகளுக்காக வாடகைக்கு விட்டு அதன் மூலம் வருவாய் ஈட்டப்படுகிறது.

இதன் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து ஊராட்சியின் உதவியுடன் ஒரு ஏக்கர் அளவில் மீன்பண்ணை குட்டை இரண்டு வருடத்திற்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் லாபமாக ரூ.40,000/– இந்த மீன் பண்ணை குட்டை மூலம் ஈட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அந்த கிராமத்தில் இருக்கும் மூன்று ஏக்கர் நிலத்தினை குத்தகைக்கு எடுத்து குழுவின் உறுப்பினர்கள் குழுவாக இணைந்து வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய செயல்பாடுகளின் காரணமாக குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது.





## வாசமலர் மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

தூத்துக்குடி மாவட்டம், முத்தையாபுரம், அய்யங்கோவில் தெருவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் வாசமலர் மகளிர் சுய உதவிக் குழுவில் 9 பெண்கள் உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து கருவாடு மற்றும் ஊறுகாய் வகைகளைத் தயாரித்து "வெற்றி ஊறுகாய்" என்ற பெயரில் விற்பனை செய்து வருகின்றனர். நாளொன்றுக்கு 7.5 கிலோ அளவில் ஊறுகாய் தயாரித்து விற்பனை செய்து வருவதுடன், நாரத்தை, எலுமிச்சை மற்றும் மாங்காய் ஆகியவற்றில் கூழ் வடகம், கூழ் வற்றல் ஆகியவற்றையும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்களை அருகில் உள்ள சிறு கடைகளில் விற்பனை செய்வதுடன் மகளிர் திட்டம் மூலம் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளிலும் விற்பனை செய்து வருவாய் பெற்று வருகின்றனர். இதன் மூலம் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 10,000/– வரை வருவாய் கிடைக்கிறது.







## கெங்கையம்மாளின் வெற்றிக் கதை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வாழ்வாதார வளர்ச்சி பெற்றுள்ள இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட திருமதி. கெங்கையம்மா கூறும்போது, எனது பெயர் கெங்கையம்மா, எனது கணவர் அந்தோணிச்சாமி. நாங்கள் இலங்கை யாழ்ப்பாணம் பகுதியிலுள்ள மிருசு வினை என்ற கிராமத்தில் மூன்று குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தோம். இந்நிலையில் 1990ல் யாழ்ப்பாணத்தில் இனவெறி மோதல் நடைபெற்ற போது, எங்கள் கிராமத்தில் இருந்து எங்களை விரட்டியடித்தனர். எங்களின் உயிரைப் பாதுகாக்க மீன்பிடி படகு மூலம் தமிழ்நாட்டின் தனுஷ்கோடிக்கு வந்து சேர்ந்தோம். அப்போது தான் எங்களுக்கு எங்கள் உயிர் மீது நம்பிக்கை வந்தது.

அரசு அதிகாரிகள் எங்களை இராமேஸ்வரம் அழைத்து சென்று தங்க வைத்தனர். தொடர்ந்து சில நாட்களில் திருநெல்வேலியில் உள்ள முகாமிற்கு அனுப்பி வைத்தனர். பின்னர் கடையநல்லூர் வட்டார போகநல்லூர் ஊராட்சியில் உள்ள முகாமில் தங்க வைத்தனர்.

வீடு வாசல் சொத்து என அனைத்தையும் இழந்து தனிமரமாய் தமிழகம் வந்து சேர்ந்த எங்களை வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் என்ற பழமொழிக்கு ஏற்ப இங்கு எனது கணவர் முள்வேலி செய்யும் தொழில் செய்து எங்களது குடும்பத்தை கவனித்து வந்தார். நான் எந்த ஒரு வெளி வேலையும் செய்ய தெரியாததால் வீட்டு வேலை மட்டும் செய்து வந்தேன். எனது கணவர் மட்டுமே பணிக்கு செல்வார்.

எனது மூத்த மகள் Lab technician பயிற்சி முடித்துள்ளார். அவரை கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை முகாமில் உள்ள ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது இளைய மகள் Nursing படிப்பு முடித்துள்ளார். அவரை திருநெல்வேலியில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன்.

2004–ஆம் ஆண்டு எங்கள் பகுதியில் உள்ள 15 நபர்கள் ஒன்று சேர்ந்து, "அன்பு மகளிர் சுய உதவிக் குழுவினை" ஆரம்பித்து, செயல்பட்டு வந்தோம்.

இந்நிலையில் திடீரென எனது கணவர் மரணம் அடைந்து விட்டார். அப்போது உலகம் இருண்ட மாதிரி இருந்த எனக்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கடையநல்லூர் வட்டார அலுவலர்கள் என்னை நேரிடையாக சந்தித்து "உங்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள கடையினை தருகிறோம்" என்று உறுதியளித்தனர். பின்னர் அந்த கடையினை நடத்துவதற்கு ரூ.10,000/– தனிநபர் கடனாக கொடுத்தனர். தற்போது கடையின் மூலம் எனக்கு தினமும் இலாபமாக ரூ.300/– க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. தனி மரமாக இருந்த என்னை தனியொரு தோப்பாக மாற்றிய எனது அன்பு சுய உதவிக் குழுவிற்கும், மகளிர் திட்ட அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. கெங்கையம்மா.



# ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு

## தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், தித்தியோப்பன அள்ளி ஊராட்சி, காசிகானப்பள்ளி கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 20 பெண்களும் நலிவுற்றோர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஊக்குனர் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மகளிர் திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன.

இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சுய தொழில் நடவடிக்கையாக கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களின் தொழிலினை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தேவையான மூலதனம் வேண்டி ஊரக வாழ்வாதார இயக்கத்தினை ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நாடினர்.





வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 1.25 இலட்சம் ரூபாய் மானியத்துடன் ரூ. 5 இலட்சம் ரூபாய் பொருளாதாரக் கடனாக இக்குழுவிற்கு வழங்கப்பட்டது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு, கர்நாடக மாநிலத்தில் உள்ள கிராமப்புறங்களில் இருந்து தேவையான மூலப்பொருட்களை வாங்கி, குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கயிறு உற்பத்தியில் ஈடுபட்டு அதிக அளவில் தரமான கயிறுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் துவங்கினர்.

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் கயிறுகள் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சி, சேலம், ஈரோடு, பெங்களூர், டெல்லி, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர்.

சிறிய அளவில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தங்களுக்கு கடனுதவி வழங்கி பெரிய தொழில் முனைவோர்களாக உருமாற்றிய, தமிழ்நாடு அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும், ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும், ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# வாழ்வை மாற்றிய தொழிற்பயிற்சி...



என் பெயர் மௌலிமாலிகா, நான் ஈரோடு மாவட்டம், டி.என். பாளையம், அக்கரை கொடிவேரி ஊராட்சியில் வசித்து வருகிறேன். பத்தாம் வகுப்புவரை படித்துள்ள நான் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில் இருந்து வந்தேன். என் தந்தை பெயர் வேலுச்சாமி, அவர் தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்கிறார். எனது தாயின் பெயர் விஜயலட்சுமி அவர் எங்கள் பகுதியில் செயல்படும் தென்றல் மகளிர் சுய உதவிக்குழுவில் கடந்த இரண்டு வருடங்களாக உறுப்பினராக உள்ளார்.

அக்கரை கொடிவேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக DDU-GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்காக வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. அந்த முகாமில் நான் கலந்துகொண்டு DDU-GKY திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் பல்வேறு பயிற்சிகள் பற்றி தெரிந்து கொண்டேன்.

பின்னர் ஈரோடு ரங்கம்பாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவிற்கு சென்று GDA பயிற்சியை தேர்வு செய்தேன். அதைத் தொடர்ந்து கோபிச்செட்டிப்பாளையத்தில் உள்ள தண்டபாணி ரூரல் சேரிடபுள் ட்ரஸ்ட்டில் மூன்று மாதகாலம் GDA பயிற்சி பெற்றேன். இந்தப் பயிற்சி எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

பயிற்சிக்குப் பின் தற்பொழுது கோபியில் உள்ள வி.ஜி.ஆர்த்தோ சென்டரில் கடந்த இரண்டு மாதகாலமாக பணியாற்றி வருகிறேன். மாத ஊதியமாக எனக்கு ரூ.6000/– வழங்கப்படுகிறது. என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த எனக்கு இப்படியொரு பயிற்சி கிடைத்தது மிகவும் பயன் உள்ளதாக இருந்தது. என் வருமானம் என் குடும்பத்திற்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த அக்கரை கொடிவேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், DDU-GKY திட்டத்திற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

– மௌலிமாலிகா

# வாழ்வை ஒளிமயமாக்கிய இயக்கம்...




எனது பெயர் தனபால், ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், இச்சிப்பாளையம் ஊராட்சியில் வசித்து வரும் நான், +2வரை படித்துவிட்டு மேற்படிக்கு வசதி இல்லாத காரணத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் வீட்டில் இருந்து வந்தேன். எனது பெற்றோர் விவசாய கூலி வேலை செய்து வருகிறார்கள்.

எனது தாயார் தாமரைப்பாளையம் குக்கிராமத்தில் உள்ள ஸ்ரீ சிவசக்தி மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளார். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் DDU-GKY திட்டத்தின் மூலம் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளைஞர் திறன் திருவிழா நடைபெறும் என்ற விபரம் என் தாயாருக்கு தெரிவிக்கப்பட்டது. நானும் ஈரோட்டில் நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவில் கலந்து கொண்டு என் விருப்பப்படி பெருந்துறை DMW நிறுவனத்தில் CNC மிஷன் ஆபரேட்டர் பயிற்சியை தேர்வு செய்து பயிற்சியில் இணைந்தேன்.

மூன்று மாதகாலம் பயிற்சி பெற்று செப்டம்பர் மாதம் கோயமுத்தூரில் உள்ள நிறுவனத்தில் CNC மிஷன் ஆப்ரேட்டராக பணி ஆணை பெற்று பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மாத ஊதியமாக ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

எனது எதிர்காலத்தை ஒளிமயமாக்கிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்திற்கும், DDU-GKY திட்டத்திற்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

DDU-GKY திட்டம் மூலம் நான் பெற்ற இந்த அரிய வாய்ப்பை என்போல மேற்படிப்பு படிக்க இயலாத மாணவர்களும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனைவரிடமும் சொல்லி வருகிறேன்.

– தனபால்

# பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் சங்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் 5000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம் எல்லைப் பகுதியில் இப்பேரூராட்சி அமைந்துள்ளதால் பொதுமக்களுக்கு கல்வி அறிவு குறைவாக இருந்தது, புதிதாக சுயஉதவி குழுக்கள் துவங்குவதற்கு பேசும் போது பெண்கள் ஆர்வம்காட்டவில்லை.

வார்டுவாரியாக பெண்களை அழைத்து கூட்டம் போட்டு சுயஉதவிக் குழுக்களின் நன்மைகளை எடுத்துக் கூறி குழுக்கள் எப்படி நடத்த வேண்டும் என்று பயிற்சி அழிக்கப்படும் என்று தெரிவித்து சுயஉதவி குழுக்கள் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 7வது வார்டில்வசித்துவரும் 12 பெண்களை சேர்த்து ஸ்ரீமகாலட்சுமி என்ற பெயரில் சுயஉதவிக் குழுவினைத் தொடங்கினோம். எங்களது சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூங்கில் கூடை தொழில் செய்து வருகிறோம்.

எங்கள்தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களான மூங்கில் மரங்கள் எங்கள் வட்டாரத்தில் கிடைப்பதால் இத்தொழிலை தேர்வுசெய்து வருகிறோம். நாங்கள் மூங்கில் கூடைகளை தயார் செய்து உள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி, ஓசூர், பெங்களூர் போன்ற நகரங்களுக்கு அனுப்பி விற்பனை செய்து வருகிறோம். இதன் மூலம் எங்களது வியாபாரம் நன்றாக நடந்துவருகிறது. உறுப்பினர்களை குழுவில் சேர்த்ததன் மூலம் எங்கள் குழுஉறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் 20,000/– வரை வருமானம் கிடைத்து வருகிறது.

எங்கள்கு முழஉறுப்பினர்கள் முன்னேற்றம் அடைய உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் குழுஉறுப்பினர்கள் அனைவரும் நன்றியை செலுத்துகிறோம்.

– உறுப்பினர்கள், ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் சங்கம்







## திருநங்கையரின் வாழ்வில் வளர்ச்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வாழ்வாதார வளர்ச்சி பெற்ற எண்ணற்றவர்களில் சென்னை, கொளத்தூர், புத்தகரம் புருஷோத்தமன் நகர் 3வது தெருவில் வசிக்கும் ஷமா (வயது 42) என்ற திருநங்கையும் ஒருவர். துணிக்கடை ஒன்றில் விற்பனையாளராக பணியாற்றி வந்த ஷமா, கொரொனா பரவலின் காரணமாக அவர் பணியாற்றி வந்த துணிக்கடை மூடப்பட்டதால் வேலையை இழந்த நிலையில் எதிர்காலத்தை எண்ணி கலக்கமுற்றார்.

இருப்பினும் மனம்தளராமல், வாழ்வை எதிர் கொள்ள போராடிய ஷமா தான் வசிக்கும் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வந்த ராயல் திருநங்கையர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்து, அதன் தனக்கு தொழில்வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திட கோரி விண்ணப்பித்தார். ஷமாவின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்கு தமிழ்நாடு நகர்ப்புரவாழ்வாதார இயக்கத்தின் தனிநபர் சுய தொழில் திட்டத்தின் கீழ் இந்தியன் வங்கி மைக்ரோசாட் கிளையின் மூலம் ரூ. 1 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு ஷமா சிறிய துணிக்கடை ஒன்றினை ஆரம்பித்தார்.

தற்போது இந்தக் கடை மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 45,000/– வரை வருவாய் பெற்றுவரும் ஷமா தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.




## "சானிட்டரி நாப்கின்" தயாரிக்கும் இமயம் மகளிர் சுய உதவிக்குழு

வேலூர் மாவட்டம், ஒடுக்கத்தூர் பேரூராட்சியில் தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் இமயம் மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் குழு உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக பயிற்சி வழங்கப்பட்டது. பின்னர் இக்குழுவின் உறுப்பினர்கள் வங்கி கடன் இணைப்பாக ரூ.3,50,000/– பெற்று "புதுயுகம்" என்ற பெயரில் சானிடரி நாப்கின் உற்பத்தியை தொடங்கினர். ஆரம்பத்தில் உள்ளூர் சந்தையில் மட்டுமே கவனம் செலுத்தி விற்பனை செய்து வந்தனர். தொடர்ந்து வேலூர் மாவட்ட சுகாதார மையத்திற்கு மாதம் 3215 பாக்கெட் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு மாதந்தோறும் 3000 பாக்கெட் "சானிடரி நாப்கின்" உற்பத்தி செய்து வழங்கி வருகின்றனர். இக்குழு இரண்டாவதாக இந்தியன் வங்கி மூலமாக 2021–ஆம் ஆண்டு ரூ.9,60,000/– வங்கி கடன் பெற்று அதை மூலதனமாகக் கொண்டு அதிக அளவில் சானிடரி நாப்கின்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். இமயம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சானிட்டரி நாப்கின்களை தயாரிப்பு தொழிலை வெற்றிகரமாக நடத்துவது மட்டுமின்றி துணிப்பைகளை தைத்தும் கடைகளுக்கு சப்ளை செய்து வருகின்றனர். நாப்கின் தயாரிக்கும் மூலப்பொருட்கள், மின் கட்டணம், ஊதியம், போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற செலவுகள் போக மாதம் ரூ.61,680/– வரை இமயம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் லாபம் பெற்று வருகின்றனர்.





# இமயம்பகுதி அளவிலான கூட்டமைப்பின் வெற்றிகரமான செயல்பாடுகள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டம் எண். 8ல் தமிழ்நாடு நகர்ப்புரவாழ்வாதார இயக்கத்தின் கீழ் துவங்கப்பட்ட 10 மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து இமயம் பகுதி அளவிலான கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்தபகுதி அளவிலான கூட்டமைப்பில் உள்ள குழுக்களிடம் நுழைவுக் கட்டணம் மற்றும் பங்குத்தொகை பெறப்பட்டு வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கப்பட்டு தொடர்ந்து சிறுசேமிப்பு வசூல் செய்து இக்கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. வருடந்தோறும் பகுதி அளவிலான கூட்டமைப்பு புதுபிக்கப்பட்டு, அலுவலக பொறுப்பாளர்கள் பொதுக்குழுவில் தேர்வுசெய்யப்பட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இமயம் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு சுழல் நிதியாக ரூ.50,000 பெற்றுத் தரப்பட்டது. மேலும் சிறு சேமிப்பு தொகை உயர்ந்து வருவதால், அக்குழு உறுப்பினர்கள் தொழில் விரிவடைய, வங்கியின் மூலம் கடன்பெற விண்ணப்பிக்க தீர்மானிக்கப்பட்டு வரவு, செலவு பட்டியலிட்டு கனரா வங்கி, அஸ்தம்பட்டி கிளையில் விண்ணப்பம் வழங்கப்பட்டது. தொடர்ந்து இப்பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.15,00,000/–வரைவோலை மாண்புமிகு தமிழக முதல்வர்அவர்களால் சேலம் மாவட்டத்தில் 11.12.2021 அன்று நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மேடைப்பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள ஸ்ரீசக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவி திருமதி.செல்வபிரியா என்பவர் தையல் தொழில் செய்து, மேலும் குறைந்த கட்டணத்தில் பயிற்சியும் நன்முறையில் அளித்து வருகிறார்.

இனிய மலர் மகளிர் சுய உதவிக்குழு பொருளாளர் திருமதி. ஜீவிதா Stationaries & Xerox Centre நடத்திவருகிறார். Union Bank of India Cinnathirupathi வங்கியின் மூலம் தனிநபர் கடன் ரூ.2,00,000/– பெற்று தொழிலை மேலும் சிறப்பாக நடத்தி வருகிறார். இதேகுழுவில் உறுப்பினரான திருமதி.சுதா என்பவர் பினாயில் தயாரித்து விற்பனை செய்து அவர் மட்டுமின்றி அவரது குடும்பமும் பயனடைந்து வருகிறார்.

ஸ்ரீ ஆஞ்சநேயா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர் திருமதி. அம்பிகா என்பவர் பாரம்பரிய காரம் மற்றும் இனிப்பு வகைகளான லட்டு, முறுக்கு, மிக்சர், அதிரசம் போன்றவற்றை வீட்டிலேயே தயாரித்து ஆர்டரின் மூலம் விற்பனை செய்து வருகிறார். மேலும், இரவு நேரடிபன் கடையும் வீட்டிலேயே நடத்தி வருகிறார்.

குறிஞ்சி மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர் திருமதி. லட்சுமி என்பவர் உள்கடன் ரூ.15,000 பெற்று தள்ளுவண்டியில் பழக்கடை நடத்தி வருகிறார். இவ்வாறாக இமயம் பகுதி அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள சுய உதவிக் குழுகளில் உள்ள உறுப்பினர்கள் இக்கூட்டமைப்பின் மூலமும் உள்கடன் பெற்றும், குழுக்கடன் பெற்றும் அவர்களது தொழிலை மேம்படுத்தி அதன் மூலம் வருமானம் ஈட்டி தங்களையும், தங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தையும் சமுதாயத்தில் சிறப்பாக மேம்படுத்தி வருகின்றனர்.





# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் முருங்கைக் கீரை தோசை



பொதுவாகவே இரும்பு சத்து உள்ள காய்கறிகள், நோய் எதிர்ப்பு சத்து உள்ள காய்கறிகளில் எல்லாம் சுவை குறைவாகத்தான் இருக்கும். பெரும்பாலும் சத்து நிறைந்த உணவுப் பொருட்களில் சுவை குறைவுதான். அதை குழந்தைகளும் சரி, பெரியவர்களும் சரி விரும்பி சாப்பிடுவது இல்லை. அந்த வரிசையில் முருங்கைக் கீரைக்கு முதலிடம் உண்டு. இதில் இரும்பு சத்து அதிகம். நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகம். சில பேர் வீட்டில் யாரும் இதை சாப்பிட மாட்டார்கள் இந்த முருங்கைக் கீரையை வைத்து நாவிற்கு சுவை தரக்கூடிய சூப்பரான தோசை செய்வது எப்படி என்பதை பற்றித்தான் இந்தப் பதிவின் மூலம் நாம் தெரிந்து கொள்ள போகின்றோம்.

### செய்முறை

அடுப்பில் ஒரு கடாயை வைத்து நெய் – 1 டேபிள் ஸ்பூன் ஊற்றிக் கொள்ள வேண்டு. நெய் நன்றாகக் காய்ந்து வந்ததும் சீரகம் – 1/2 ஸ்பூன், மிளகு – 1/2 ஸ்பூன், சின்ன வெங்காயம் – 10, பூண்டு பல் – 8, பச்சை மிளகாய் – 2, பெருங்காயத் தூள் – 1/4 ஸ்பூன், போட்டு இதை எல்லாவற்றையும் பச்சை வாடை போக நன்றாக வதக்கிவிட வேண்டு.

அதன் பின்பு ஒரு கைப்பிடி அளவு சுத்தம் செய்த முருங்கைக் கீரையை கடாயில் சேர்த்து நன்றாக வதக்கி விடுங்கள். முருங்கைக் கீரையின் பச்சை வாடை போன பின்பு இறுதியாக இந்த முருங்கைக் கீரைக்கு மட்டும் தேவையான அளவு உப்பு சேர்த்து கலந்து, இதை நன்றாக ஆற வைத்து, ஒரு மிக்ஸி ஜாரில் போட்டு விழுது போல அரைத்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அரைத்துக் கொள்ளலாம். இந்த விழுதை தோசை மாவில் ஊற்றி நன்றாகக் கரைத்து கொள்ளுங்கள். தோசை மாவில் உப்பு இருக்கும். அப்படி தோசை மாவில் உப்பு இல்லை என்றால் தோசை மாவுக்குத் தேவையான உப்பை போட்டு இந்த முருங்கைக் கீரை விழுதை அதில் ஊற்றி, நன்றாகக் கலந்து விட்டால் பச்சை நிற இரும்புச் சத்து நிறைந்த தோசை மாவு தயார். (மாவு ரொம்பவும் கட்டியாக இருந்தால் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி தோசை மாவு பதத்திற்கு லேசாகக் கரைத்துக் கொள்ள வேண்டு.)

அடுப்பில் தோசை கல்லை வைத்து நன்றாக சூடு செய்து கொள்ளுங்கள். அடுப்பை முழுமையாக சிம்மில் வைத்து விட்டு தயாராக இருக்கும் இந்த மாவை கடாயில் ஊற்றி மெல்லிசாக தீட்டி நல்லெண்ணெய் ஊற்றி பொன்னிறமாக சிவக்க விட்டு, திருப்பி போட்டு மீண்டு வேகவைத்து எடுத்து சுடச்சுட பரிமாறினால் அருமையான ஆரோக்கியம் தரும் தோசை தயார். அடுப்பை சிம்மில் வைத்து விட்டு தோசையை பொறுமையாக சிவக்க விட்டு எடுக்க வேண்டும். வாரத்தில் ஒரு நாளாவது குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு இந்த தோசை சுட்டுக் கொடுங்கள். இதை வேண்டாம் என்று நிச்சயம் சொல்ல மாட்டாங்க. மணக்க மணக்க வாசம் நிறைந்த தோசையாக இது இருக்கும்.

### இனிய இல்லத்திற்கு முத்தான சிறு குறிப்புகள்.

- சமைக்கும் பொழுது பயன்படுத்தும் கரண்டி கனமாக இருப்பதை விட, லேசாக இருக்குமாறு பார்த்து வாங்கிப் பயன்படுத்தி பாருங்கள், வாட்டமாகவும், சுலபமாகவும் இருக்கும். கன குறைவாக உள்ள கரண்டியை வாங்கி உங்கள் தேவைக்கு ஏற்ப வளைத்து வதக்குவதற்குப் பயன்படுத்தினால் கச்சிதமாக இருக்கும்.
- முட்டையை அவிக்கும் பொழுது அவிக்க பயன்படுத்தும் பாத்திரம் அகலமாக இல்லாமல், குறுகலாக இருந்தால் அவ்வளவு எளிதாக முட்டை உடையாது. சிட்டிகை அளவு சோடா உப்பை போட்டு 10 நிமிடம் அடுப்பை மீடியமாக வைத்து எடுத்தால் சரியான பதத்தில் வேகும்.
- ரசம் வைக்கும் பொழுது கண்டிப்பாக புளித் தண்ணீரை ஊற்றுவதற்கு முன்னர் மற்ற பொருட்களை எல்லா நன்கு கொதிக்க வைத்து பச்சை வாசனை போனபின் புளித் தண்ணீரை ஊற்றினால் கசப்பில்லாத சூப் போல சூப்பரான ரசம் கிடைக்கு.
- தலை பாரமாக இருந்தால் டீ போடும் பொழுது இஞ்சி, ஏலக்காய் உடன் நாலைந்து புதினா இலைகளையும் சேர்த்து போட்டு குடித்து பாருங்கள்.
- இட்லி அவிக்கப் பயன்படுத்து துணியை தட்டில் போட்டு பின்பு மாவு ஊற்றுவதை விட, மாவு தட்டில் ஊற்றிய பின்பு மேலே துணியை போட்டு மூடி பாருங்கள், கொஞ்சம் கூட ஒட்டாமல் இட்லி அழகாக எடுக்க வரும். துணியை சுத்தம் செய்வதற்கு சுலபமாக இருக்கு.
- சைவ மற்றும் அசைவ குருமா வகைகளுக்குத் தேங்காயுடன் சீரகம், சோம்பு, மிளகு தலா ஒரு டீஸ்பூன் அளவிற்கு சேர்த்து அரைத்து ஊற்றினால் கறி சுவையை மிஞ்சும் ருசியைக் கொடுக்கும்.
- வீட்டில் பல்லிகள் தொந்தரவு அதிகமாக இருந்தால், அடிக்கடி பல்லி வரும் இடங்களில் மட்டும் மயில் தோகைகளை ஒட்டி வையுங்கள். அந்தப் பக்கம் ஒரு பல்லியும் பிறகு எட்டி கூடப் பார்க்காது.
- மோர் குழம்பு செய்யும் பொழுது மோர் திரியாமல் இருக்க, அடுப்பை குறைவாக வைத்துக் கொண்டு கொதிக்க விட வேண்டும். அரைத்த விழுதினை வதக்காமல் மோரில் கரைத்து ஊற்றினால் மோர் திரியாமல் இருக்கும்.
- சப்பாத்தி மாவு மிருதுவாக பஞ்சு போல இருக்க கோதுமை மாவுடன், கொஞ்சம் நெய் விட்டு பிசைந்து பாருங்கள். நீண்ட நேரத்திற்கு சாஃப்ட் ஆகவும், சுடுவதற்கு மிருதுவாக பஞ்சு போலவும் வரும்.

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் வெற்றிக் கதை...!

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாரத்தில் உள்ள அய்யம்பாளையத்தில் 2015ஆம் ஆண்டு அய்யம்பாளைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கியின் ஆதரவில் உருவாக்கப்பட்டது. 1000 விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்படுகிற இந்த நிறுவனத்தின் விவசாயிகள் பயன்பெறு வகையில் மாவட்ட வேளாண் பொறியியல் துறை மூலமாக எண்ணெய் வித்துகள் அரைக்கும் இயந்திரம், சத்துமாவு அரைக்கும் இயந்திரம் மானியமாக வழங்கப்பட்டது. ஆனால் கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் மூலப்பொருட்கள் வாங்குவதற்காகவும், வேளாண் பொருட்கள் விற்பனைக்காகவும் இந்த நிறுவனத்தின் விவசாயிகள் மிகுந்த தடுமாற்றம் அடைந்திருந்தனர்.

அந்தசமயத்தில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் கோவிட் – 19 சிறப்பு நிதி – மானியமாக எண்ணெய் வித்துகள் வாங்கவும், விற்பனை சார்ந்த முன்னெடுப்புகளுக்கு தென்னம்பிள்ளை விதைப் பண்ணைக்காகவும் ரூ.10,00,000/– வழங்கப்பட்டது. மூலப்பொருட்கள் கொள்முதல், உணவுப் பொருள் தயாரிப்பு, விற்பனை என சுழற்சி முறையில் அனைத்து விவசாயிகளும் பயனடையும் விதமாக இந்த நிறுவனம் தன் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உறுதுணையாக இருந்தது.

இதனையொட்டி, நபார்டு நிதி நிறுவனமான நாப்சான் கடனுதவியாக ரூ.20,00,000/– வழங்க பங்குதாரர்கள் தங்கள் வேளாண் பொருட்கள் விற்பனையில் முன்னேற்றம் அடையத் தொடங்கினர். மேலும் தமிழ்நாடு அரசுத் திட்டமான மூலதன நிதி ரூ.10,00,000/– தொகையினை மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு நாப்சான் நிறுவனம் கடன் வழங்க, நிறுவனத்தின் செயல்பாடுகள் சீரடையத் தொடங்ன.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தொடர்ந்த வழிகாட்டுதலில் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு முன்னெடுப்புகளை இந்த நிறுவனம் அடைந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டும், கோவிட் சிறப்பு நிதியுதவியினை முறையாக செலவு செய்து நிறுவனத்தின் வளர்ச்சி அடைந்துள்ளமைக்கு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதமாக காலநிலையைக் கணித்து பசுமை வேளாண்மை செய்வதற்காகவும் அய்யம்பாளையம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு தர மதிப்பு 'ஏ' (, பசுமை மதிப்பீடு 'G' (2) வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியும், வாழ்ந்து காட்டுவோம் திட்டமும் இணைந்து இந்த மதிப்பீட்டினை வழங்கியுள்ளனர். இதனடிப்படையில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் அய்யம்பாளையம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு உலக சுற்றுச்சூழல் தின விழாவில் பசுமை விருது வழங்கப்பட்டது.

அய்யம்பாளையம் உழவர் உற்பத்தி நிறுவனத்தில் நீர்ச்செறிவு மேலாண்மை, கால நிலையை கணித்து பசுமை வேளாண்மை செய்வது, நீர் நிலப்பாதுகாப்பு சார்ந்த பணிகளை மேற்கொள்வது, வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டி அக்மார்க் சான்றிதழுடன் விற்பனை செய்வது, அக்மார்க், தரமான நாட்டு ரக தென்னை நாற்றுகள் வளர்ப்பது போன்ற பணிகளுக்காக பல்வேறு தர மதிப்பீடுகளின் அடிப்படையில் சென்னையில் நடைபெற்ற நபார்டு நிறுவன நாள் விழாவில் அய்யம்பாளையம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நபார்டு வங்கியின் விருது வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் செயல்படுகிற 900 நிறுவனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு நிறுவனங்களுள் ஒன்றாக அய்யம்பாளையம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் இவ்விருதை பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





# வளமான தொழிற்குழுவாக மாற்றிய சமுதாயத் திறன் பள்ளி !

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் அமைக்கப்பட்டுள்ள சமுதாயத் திறன் பள்ளியில் (CSS) பல்வேறு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சிப் பள்ளியில் வாழை நாரில் பல்வேறு பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 30 நாட்கள் நடத்தப்பட்டது. வாழை நாரில் காய்கறி கூடைகள், சேமிப்பு கூடைகள், சலவை கூடைகள் மற்றும் பென்சில் ஸ்டாண்ட், கயிறு ஆகிய பொருட்களை தயாரிப்பது குறித்த பயிற்சியானது பயனாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன. வாழை நார் பொருட்களைத் தயாரித்தப் பயிற்றுநர்கள் அப்பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகள் குறித்து அறிந்து கொண்டனர். இப்பயிற்சியில் தயாரித்த அனைத்துக் கூடைகளும் மதுரை மாவட்டத்திலுள்ள ஓம் பனானா ஃபைபர் கிராஃப்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திற்கு விற்கப்பட்டு அதற்கானத் தொகை பெறப்பட்டது. மேலும் இப்பயிற்சியின் மூலம், ஒரு தொழிற்குழுவாக இணைந்து செயல்பட்டால் வாழை நாரிலிருந்து இலாபம் ஈட்டலாம் என்பதைக் கற்றுக்கொண்டனர்.

தொழிற்குழுவின் முக்கியத்துவத்தை அறிந்த மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் உள்ள மேலமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் (இதில் 8 உறுப்பினர்கள் வாழைத்தோப்பு வைத்திருப்பவர்கள்) இணைந்து ஒரு தொழிற்குழுவை உருவாக்கினர். மேலும் தொழிற்குழுவிற்கானத் தொடக்க நிதி ரூ.75,000/– த்தை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பெற்றனர். இந்த நிதி தொழிற்குழுவிற்கு வாழை நார் வாங்க உதவியது. ஒரு ஏக்கர் அளவில் வாழை நார் வாங்குவதற்குத் தோராயமாக ரூ.15,000/– தேவைப்பட்டது. மேலும் ஒவ்வொரு உறுப்பினருக்கு ரூ.2,000/– மதிப்பிலான 4 விதமான மோல்டுகள் வாங்கப்பட்டன. இது தவிர போக்குவரத்துச் செலவு ஆனது. முதல் முறையாகத் தங்கள் குழு உறுப்பினரிடமிருந்தே வாழை நாரை வாங்கிக் கொண்டனர்.

முதலில் கூடைகள் மற்றும் கயிறுகள் தயாரிப்பதற்கு நிறைய நேரம் எடுத்துக் கொண்டனர், 3 மாதங்களுக்குப் பிறகு விரைவாக முடிக்கப் பழகிக் கொண்டனர். தற்பொழுது 5 நாட்களில் 2000 கயிறுகள் மற்றும் 200 பொக்கே கூடைகளை உற்பத்திச் செய்கின்றனர். வாடிக்கையாளர்களின் தேவை அடிப்படையில் பொருட்களைத் தயாரித்து வழங்குன்றனர். இதில் இக்குழுவினர் ஒரு மாதத்திற்கு ரூ. 1,20,000/– வரை சம்பாதிக்கின்றனர்.

இத்தொழிற்குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதத்திற்கு ரூ.8,000/– வரை வருவாய் பெறுகின்றனர். விற்பனையைப் பொறுத்து ஒவ்வொரு மாதமும் வருவாய் மாறுபடும். இக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் உற்பத்தி களைத் தங்கள் மாவட்டத்திலுள்ள சந்தைகளிலும் விற்பனைச் செய்கின்றனர். உள்ளூர் திருமணங்கள் மற்றும் ஊர் விழாக்களுக்குத் தனி ஆர்டர்களின் மூலம் கூடுதல் வருவாயைப் பெறுகின்றனர். ஆகையால் சமுதாயத் திறன் பள்ளி (CSS), இவர்களுக்கு அளித்தப் பயிற்சி இவர்களைத் திறன் மிக்கவர்களாகவும் அதேவேளையில் ஒரு தொழிற்குழுவாகவும் உருவாக்கியுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு, இவர்களுக்கென எந்தத் தனிப்பட்ட வருமானமும் இல்லாமல் இருந்தனர். ஆனால், தற்பொழுது தொழிற்குழு மூலம் நல்ல வருமானத்தை உருவாக்கித் தலைநிமிர்ந்த மகளிராகப் பயணிக்கின்றனர். தொழிற்குழுவின் மூலம் நிர்வாகத் திறனையும் கற்றுக்கொண்டுள்ளனர். இதன் மூலம் தங்கள் தொழில் வளத்தையும் வருவாயையும் பெருக்கிக்கொண்டு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வர்.



# தனிநபர் தொழில் முனைவோரின் வெற்றிக்கதை!

என் பெயர் கௌரி ராசு. M.B.A., படித்துள்ள என்னை என் தந்தை சாமிதுரை மாவட்ட ஆட்சியராக்க ஆசைப்பட்டு, அதற்காக படிக்க வைத்தார். சில தேர்வுகள் மட்டும் எழுதினேன். எனக்கு பின் தங்கை தம்பி இருப்பதால் திருமணத்திற்கு பின் படித்து கொள்ளலாம் என்று என் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு திருமணம் செய்து வைத்தார்கள்.

திருமணத்திற்கு பின் என் கணவருடன் சிங்கப்பூருக்குச் சென்ற நான் அங்குள்ள ஒரு நிறுவனத்தில் வேலைப் பார்த்ததுடன், அந்நாட்டின் தொழில்கள் பற்றியும் அறிந்து கொண்டேன். அங்குள்ள மால்களுக்கு செல்லும்போது, அங்கு என் சொந்த தயாரிப்பு ஏதாவது விற்பனைக்குக் கொண்டு வர வேண்டும் என்றெண்ணினேன். நான் விற்பனை பிரிவில் வேலை பார்த்துக் கொண்டே இளங்கலை பட்டப் படிப்பு படித்து வந்ததால், எனக்கு தொழில் செய்வதில் ஆர்வம் அதிகமாகவே இருந்தது. இந்நிலையில் பிரசவத்திற்காக தமிழ்நாட்டுக்கு வந்தேன். பிரசவத்திற்கு பின்னர் என்னால் திரும்ப குழந்தையை விட்டுவிட்டு சிங்கப்பூருக்குப் போக முடியவில்லை.

எனவே, நான் ஏதாவது தொழில் தொடங்க முயற்சித்தேன். கடலூரில் பெரியதாக காளான் பண்ணை ஏதுமில்லை. காளான் மிகச் சிறந்த உணவு என்று நன்கு படித்து தெரிந்து கொண்டு முதலில் ரூ.80,000/– செலவு செய்து ஒரு காளான் கொட்டகை அமைத்து பல இடங்களில் பயிற்சி எடுத்துக் கொண்டேன்.

இந்த சமயத்தில், என் கணவரும் சிங்கப்பூரில் இருந்து வந்து விட்டார். இருவரும் சேர்ந்து காளான் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டோம். பல ஏமாற்றங்களை அனுபவங்களாகக் கொண்டு, விருதாச்சலம் KVK-யில் பயிற்சிப் பெற்றோம். பின் RSETI மூலம் பயிற்சி மேற்கொண்டதுடன், காளானின் நன்மைகளைக் கூறி விற்பனை செய்து மென்மேலும் தொழிலை விரிவுபடுத்தினோம்.

நாள் ஒன்றிற்கு 10 கிலோ பால் காளான் மற்றும் சிப்பி காளான் உற்பத்திச் செய்து, வடலூர், விருதாச்சலம், திருச்சி, கடலூர், மார்த்தாண்டம் மற்றும் கேரளா வரை விற்பனை செய்தோம். இந்நிலையில், கொரோனா பொது முடக்கக் காலத்தில் காளானை விற்பனைச் செய்ய முடியாததால் மிகப் பெரிய இழப்பை சந்தித்தோம். எங்களுக்குத் தேவையான விதைகளை பெங்களூரில் இருந்து வாங்கி வந்தோம். அதுவும் தடைபட்டது.

இந்த நேரத்தில்தான் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) எங்கள் காளான் பண்ணையை பார்வையிட்டு, எங்களுக்கு ரூ.50,000/– கடன் வழங்கி தொழிலை மீண்டும் தொடங்க உதவி செய்தது. இத்தொகையை கொண்டு எங்களது தொழிலை விரிவுபடுத்தினோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலில் இந்தியன் வங்கி மூலம் ரூ.8,00,000/– கடன் உதவி செய்தார்கள். அவற்றை கொண்டு விதை தயாரிக்கும் இயந்திரம் வாங்கினோம்.

தற்போது நாங்களே சொந்தமாக விதைகளை தயாரித்து காளான் உற்பத்தி செய்து, அவற்றின் மதிப்பு கூட்டு பொருள்களாக காளான் ஊறுகாய், சூப் மிக்ஸ், காளான் பிஸ்கட் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் மாதம் ரூ.1,00,000/– வரை வருவாய் பெற்று வருகிறோம்.

தற்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாய திறன் பள்ளி மூலமாக காளான் வளர்ப்பு பயற்சியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள நான் RSETI மூலமாக காளான் வளர்ப்பு குறித்த பயிற்சிகளைக் கொடுத்து வருகின்றேன். எங்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்றோம். எங்களுடைய மதிப்புக் கூட்டு பொருட்கள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பது எங்களது இலட்சியம். நானும் என் கணவரும் காளான் வளர்ப்புத் தொழிலை மட்டுமே செய்து அவற்றின் எல்லைகளை அடைய வேண்டும் என்று நினைத்து வெற்றியை நோக்கி உழைத்து வருகின்றோம்!

– கௌரிராசு, கடலூர் மாவட்டம்



Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (88,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.




சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை**
**தாருங்கள்!**

முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/– |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/– |
| மூன்று ஆண்டு | ரூ. 680/– |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் 3–வது பக்கம் | ரூ. 50,000/– |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/– |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/– |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 25th – 30th November 2022 Posted at Patrika Channel, Egmore




TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக்குரியது.